021

# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## FIRST YEAR EXAMINATIONS IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION / COMMERCE (EXTERNAL) – 2009 /2010 HELD IN AUGUST 2010

## BBA/COM 14 (II) – MACRO ECONOMICS

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.
கணிப்பான் அனுமதிக்கப்பட்டுள்ளது. நேரம்: 03 மணித்தியாலங்கள்

---

1) பின்வரும் எண்ணக்கருக்களை சுருக்கமாக விளக்குக.

i. பேரினப்பொருளியல்
ii. தன்னிச்சையான நுகர்வு
iii. தேக்கவீக்கம்
iv. பணச்சந்தை
v. சேயின் சந்தைவிதி
vi. எல்லை சேமிப்பு நாட்டம்
vii. நுகர்வினுடைய அடிப்படை விதி
viii. மூன்று துறைப் பொருளாதாரம்
ix. தூண்டப்பட்ட முதலீடு
x. மறைமுக வேலையின்மை

(2 x 10 = 20 புள்ளிகள்)

2)

(அ) பிரதான பேரினப் பொருளாதார குழுக்களின் சிந்தனைகளை அடையாளப்படுத்தி விளக்குக. .

(08 புள்ளிகள்)

(ஆ)பேரினப் பொருளாதார நோக்கங்களை அடையாளப்படுத்துக. இந்நோக்கங்கள் தமக்கிடையே பரஸ்பரம் தங்கியுள்ளன என்பதனை ஏற்றுக் கொள்வீரா? உமது விடைக்கு நியாயங்கள் தருக.

(07 புள்ளிகள்)

(இ) முதலீட்டுத் தொழிற்பாடு என்பதனால் கருதப்படுவது யாது?

(05 புள்ளிகள்)

3)

(அ) பின்வரும் அட்டவணையை பூர்த்தி செய்க.

| Y | C | S | APC | ΔY | ΔC | MPC |
|---|---|---|---|---|---|---|
| 0 | 40 | ………… | ………… | ………. | 80 | 0.8 |
| 100 | ……….. | -20 | 1.2 | 100 | ……….. | 0.8 |
| ……….. | 200 | 0 | 1.0 | ………. | 80 | 0.8 |
| 300 | ………… | ………… | 0.93 | 100 | 80 | ………… |
| 400 | 360 | 40 | ………… | 100 | ………. | 0.8 |

(04 புள்ளிகள் )

(ஆ) ஒரு திறந்த பொருளாதாரத்தின் தகவல்கள் பின்வருமாறு தரப்படுகின்றது.

(எல்லாப் பெறுமதிகளும் மில்லியன் ரூபாவில் தரப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| வருமானம் | 600 | எல்லை நுகர்வு நாட்டம் | 0.8 |
| வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை | 30 | ஏற்றுமதிகள் | 60 |
| இறக்குமதி | 50 | சராசரி சேமிப்பு நாட்டம் | 0.1 |
| முதலீடு | 50 | வரி வருமானம் | 60 |

i. சமநிலைத்தேசிய வருமானம் 1010 மில்லியனாக அதிகரிக்க அரசு செய்ய வேண்டிய மொத்த செலவு எவ்வளவு?

(04 புள்ளிகள்)

ii. முதலீட்டில் ஏற்படும் 80% வீழ்ச்சியினால் சமநிலைத் தேசிய வருமான மட்டத்தில் ஏற்படும் பாதிப்பு

(04 புள்ளிகள்)

(இ)

i. IS வளையி என்பதனால் கருதப்படுவது யாது?

(02 புள்ளிகள்)

ii. LM வளையி என்பதனால் கருதப்படுவது யாது?

(02 புள்ளிகள்)

iii. IS – LM சமநிலை என்பதிலிருந்து நீர் யாது விளங்குகின்றீர்?

(02 புள்ளிகள்)

iv. IS – LM சமநிலையில் பண விரிவாக்கத்தினுடைய தாக்கத்தினை விளக்குக?

(02 புள்ளிகள்)

4)

(அ) பிஷரின் நாணயக் கணியக் கோட்பாட்டினை விமர்சன ரீதியாக ஆய்வு செய்க.

(12 புள்ளிகள்)

(ஆ) பிஷரின் நாணயக்கணியக் கோட்பாட்டினை விட காசு நிலுவை பணக் கணியக் கோட்பாட்டின் அனுகூலங்கள் யாவை?

(08 புள்ளிகள்)

5)

(அ) கேன்சியப் புரட்சி என்பதனால் கருதப்படுவது யாது?

(08 புள்ளிகள்)

(ஆ) செலவுத் தூண்டல் பணவீக்கத்தினை கேள்வித் தூண்டல் பணவீக்கத்திலிருந்து எவ்வாறு வேறுபடுத்துவீர்.

(07 புள்ளிகள்)

(இ) செலவுத் தூண்டல் பணவீக்கத்தின் பயன்பாட்டினை இலங்கையுடன் தொடர்புபடுத்தி விளக்குக. .

(05 புள்ளிகள்)